10/=
பக்கங்கள் 06
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 102 சனிக்கிழமை ஓகஸ்ட் 26 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## உ/த. பரீட்சை மீண்டும் மாற்றம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பொது அறிவுப் பரீட்சை, எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமையே நடைபெறும் எனக் கல்வி யமைச்சு அறிவித்துள்ளது. உயர்தரப் பரீட்சை 2ஆம் திகதி நடைபெறும் என பரீட்சை அட்டவணை வெளியிடப்பட்டிருந்தது. இந்நிலையில் 2ஆம் திகதி இஸ்லாமி யர்களின் நோன்புக்காக விடுமுறை வழங் குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டி 06




## தியாகி திலீபனின் நினைவுத்தூபி புனரமைப்பு

நல்லூர் பின் வீதியில் அமைக்கப்பட்டி ருந்த தியாகி திலீபனின் நினைவுத் தூபி இன்று புனரமைக்கப்படவுள்ளது. மாலை 3 மணிய ளவில் நடைபெறும் தூபி புனரமைப்பு வேலைகளில் பங்கெடுக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. குறித்த தூபி இனந்தெரியாதோராலும், படையினராலும் சேதமாக்கப்பட்டிருந்தது. குறித்த தூபியை தாங்கள் புனரமைக்கப்போவதாக பல்வேறு அரசியல் தரப்பினர் கூறிவந்திருந்த போதிலும் இதுவரை தூபி புனரமைக்கப் பட்டிருக்கவில்லை. வடக்கு மாகாணசபை யின் 102 ஆவது அமர்வின் போதும் தூபி யைப் புனரமைக்கக் கோரிக்கை விடுக் கப்பட்டிருந்தது. (எ)

## 20க்கு எதிராக மனு தாக்கல்

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது. கூட்டு எதிரணி யைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களாக பேராசி ரியர் ஜி.எல்.பீரிஸூம், உதய கம்மன்பிலவுமே மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

மாகாணசபைகளைக் கலைத்தல், அவற்றுக்குத் தேர்தல் நடத்தும் நாளை தீர்மானித்தல் போன்ற அதி காரங்களை நாடாளுமன்றத் துக்கு வழங்கும் வகை யிலும், ஒரே நாளில் மாகாண சபைத் தேர்தலை நடத் தும் வகையிலும், 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடா ளுமன்றத்தில் முன்வைக் கப்பட்டுள்ளது. இதற்கு எதிரான மனுவொன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக் கல் செய்துள்ள பேராசிரி யர் ஜி.எல்.பீரிஸூம், உதய கம்மன்பிலவும், 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பெரும்பான் மையுடன் நிறைவேற்றப்படு வதுடன், பொதுவாக் கெடுப்புக்கும் உத்தரவிட வேண்டும் என்று கோரி யுள்ளனர். (உ)

## அலையில் சிக்கிய இளைஞன்

ஆலயத் தீர்த்தோற்சவத்துக்காக கடலுக்குள் சென்ற இளைஞன் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்ததுடன், மற்றுமொரு இளை ஞன் காப்பாற்றப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, கோளாவில் பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அக்கரைப்பற் றைச் சேர்ந்த இராமலிங்கம் ஜெகன்( 28 வயது)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (ஆ)

## யாழ்ப்பாணத்தில் 1,700 பேருக்கு டெங்குத் தொற்று



இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 700க்கும் அதி கமானோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்-என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட் டுள்ளார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி.

"நாட்டின் ஏனைய இடங்களைப் போல, வட மாகா ணத்தில் முன்னரை விட டெங்குத் தொற்று அதிகரித்துள் ளது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்த வருடத்தில் மட்டும் ஆயிரத்து 700க்கும் அதிகமானவர்கள் டெங்குத் தொற்றுக்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர். பிளாஸ்ரிக் கழிவுகளின் பெருக்கமும் டெங்குத் தொற்றுக்கு முக்கிய காரணியாகும். 06

## சரணடையச் சொல்லுங்கள்



"துன்னாலையில் மேற்கொள்ளப் பட்டுவரும் கைது நடவடிக்கைகள் தொடரும். அதேவேளை எஞ்சியி ருக்கும் குற்றவாளிகள் பொலிஸ் நிலையங்களில்சரணடைய வேண்டும்" என வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

துன்னாலையில் இன்று நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார். துன்னாலையில் மண் அகழ்வின்போது பொலிஸாரால் இளைஞன் ஒருவன் சுட்டுக்கொல் லப்பட்டிருந்தார். இதனையடுத்து அங்கு வன்முறைச்சம்பவங்கள் ஏற்பட்டிருந்தன. வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி 39 இளை ஞர்களை பொலிஸார் கைது 06

## விருப்பு வாக்கு இனி இல்லை!

நாடாளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் விருப்பு வாக்கு முறைகள் நீக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதனால் ஒரே கட்சிக்குள் மோதல் நிகழ்வதற்கு இடமிருக்காது எனவும், பண விரயமும் குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமக்குச் சாதகமாக தேர்தல் முறையை மாற்றி அமைத்தது. அத்துடன், சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்தது. விருப்பு வாக்கு முறையினால் பண விரயம் அதிகமாகும். அதனை நீக்கவுள்ளோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள எமது ஆட்சியில், நாம் சிறிய கட் சிகளின் பிரதிநிதித்துவத்தைப் 06

## அடிபணிய வேண்டாம் மைத்திரிக்கு மகிந்த ஆலோசனை



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானங்களுக்கு அடி பணியாமல் நடந்துகொள்ளவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் போரில் அங்கவீனமான படையினர் சிலரை மகிந்த நேற்றுச் சந்தித்தார். பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்க வீனமடைந்த படையினர் குறித்து விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும். படையின ரின் கோரிக்கைகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (எ)

## விஜேதாச மீது ஒழுக்காற்று நடவடிக்கை

முன்னாள் நீதி அமைச்சர் விஜே தாச ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கைக்கு ஐக்கிய தேசி யக் கட்சி தயாராகி வருவதாகச் செய்தி கள் வெளியாகியுள்ளன. விஜேதாச மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதில் ஐ.தே.கவின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் களே முனைப்புக்காட்டியிருந்தனர். தற்போதும் அவர்களே ஒழுக்காற்று நடவடிக்கை விடயத்திலும் முன்நிற் பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டாட்சி ஒப்பந்த விதிமுறைகளுக்கு முரணான வகையில் பிரதமர் மீதும் ஐக்கிய தேசியக் கட்சிமீதும் கடு மையான விமர்சனங்களை முன் வைத்ததாக அவர்மீது குற்றஞ்சுமத் தப்பட்டுள்ளது. (எ-09)

தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி

# இலங்கைக்கு கடத்தவிருந்த 140 கிலோ கஞ்சா சிக்கியது




தமிழகம் தனுஷ்கோடியை அடுத்துள்ள கம்பிப்பாடு கடற்கரையிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த ஒன்றரைக் கோடி பெறுமதியான கஞ்சா தனுஸ்கோடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டையின் போது மணலில் பதுக்கிவைத்திருந்த சுமார் 140 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். நேற்று மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கஞ்சாவைக் கடத்த முயற்சி செய்தவர் யார் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு சுமார் 1.40 கோடி ரூபா மதிப்பு எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# தமிழர் தெருவிழாவில் கனேடியப் பிரதமர்



கனடாவில் மூன்றாவது முறையாக இடம்பெறும் தமிழர் தெருவிழா இவ்வருடமும் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இத்தெருவிழா இன்றும் நாளையும் நடைபெறுகின்றது. இவ்வருட தமிழர் தெருவிழாவில் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கலந்துகொள்ளவுள்ளார்.

உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழ் மக்களின் நிகழ்வு ஒன்றிற்கு அந்த நாட்டின் பிரதமராகப் பதவியிலிருக்கும் ஒருவர் வருகை தருவது இதுவே முதன் முறையாகும். இத் தெருவிழாவுக்காக ரொறன்ரோவின் மார்க்கம் வீதியின் ஒருபகுதி போக்குவரத்து முழுமையாக மூடப்படுகிறது.

தமிழர் தெருவிழா 2017 இனை ரொறன்ரோவின் மேயர் ஜோன் ரோறி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். தமிழர் தெருவிழாவின் இரண்டு தினங்களும் 200,000 பார்வையாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# சம்பந்தனைச் சந்தித்த கல்முனைப் பிரதிநிதிகள்



எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கல்முனைத் தமிழர் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றுள்ளது. நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையில் நடைபெற்ற குறித்த சந்திப்பின் போது கல்முனைத் தமிழர் பிரதேச விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கே.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

இதன்போது, கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல் தொடர்பாக குழுவினர் எடுத்துக் கூறிய போது இதுவரை தமக்கு இவ்விவகாரம் தொடர்பில் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார். (உ)

# ஹெரோயினுடன் இருவர் கைது

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவர் தெஹிவளை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 16 கிராம் 110 மில்லிகிராம் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் களுபோவில பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான நபர் எனக் கூறப்படுகிறது. அவர் இன்று கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஹெரோயின் பொதியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இன்னொருவர்திவுலப்பிட்டிய வலவ்வத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

# வழக்குக்கு அஞ்சேன்



"என்னிடம் போதியளவு சாட்சியங்கள் காணப்படுகின்றன. இதனால் வழக்கு விசாரணைகள் குறித்து அஞ்சப் போவதில்லை" என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர், எந்தவொரு வழக்கினையும் எதிர்நோக்கத் தயாராக தான் இருப்பதாகவும் தெரிவித்தார். நீதிமன்றை அவமரியாதை செய்ததாகத் தெரிவித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு தீர்மானித்துள்மை குறிப்பிடத்தக்கது. (உ)

# தளபாடங்கள் அன்பளிப்பு



யாழ். தாவடி காளியம்பாள் சனசமூக நிலையம், சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கான தளபாடங்களை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்துள்ளார். 2017ஆம் ஆண்டுக்கான வட மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் இந்தத் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வு நேற்று வலி. தெற்குப் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது. (உ)


# குழு மோதலில் தந்தை, மகன் பலி

மினுவாங்கொடை கம்மன்கெதர பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். கொலையுண்டவர்கள் தந்தையும் மகனும் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு காரணமான மோதல் தொடர்பில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையே இந்த அசம்பாவிதத்துக்குக் காரணம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.(உ)

# சிறுவனை காணோம்




மன்னார் - வங்காலை 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செபஸ்தியான் சாளியான் மார்க் (வயது-14) என்ற சிறுவனை காணவில்லை என, குறித்த சிறுவனின் தந்தை நேற்று வெள்ளிக்கிழமை மாலை வங்காலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிறுவன் கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளான். மன்னாரில் தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு வகுப்புக்காக சென்ற நிலையில் மீண்டும் வீடு திரும்பவில்லை என, குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக வெண்ணை நீளக்கை சட்டையும், டெனிம் ஜீன்ஸூம் அணிந்திருந்தார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவன் தொடர்பில் விவரம் தெரிந்தவர்கள் அல்லது அவரை எங்கும் கண்டால் 077- 6125880 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ)

# அமீர் அலிக்கு முதலமைச்சர் பதிலளிக்கத் தேவையில்லை



பிரதியமைச்சர் அமீர் அலிக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் பதிலளிக்க வேண்டிய எந்த தேவையுமில்லை என கல்குடா தொகுதியின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞரணி அமைப்பாளர் லியாப்தீன் தெரிவித்துள்ளார்.

கல்குடாத் தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் இளைஞரணி உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் நேற்று "கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர்,

"கல்குடாத் தொகுதியில் கடந்த 13 வருடங்களாக பிரதியமைச்சர் அமீர் அலி செய்யாத சேவைகளை, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் பதவியேற்று இரண்டு ஆண்டுகளில் செய்து முடித்து வருகிறார்.

இதனால் அவருக்கு நாளுக்கு நாள் மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது.

இதனால் கோமாளித்தனமாக அறிக்கை விட்டும், சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை கூறியும் பிரதியமைச்சர் அமீர் அலி மக்கள் எள்ளி நகைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்." - என்றார்.

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# அமெரிக்காவை மிரட்டும் 'ஹார்விப் புயல்'



அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதியில் உருவாகியுள்ள 'ஹார்விப் புயல்' வலுவடைந்துள்ளதால் அது கரையை முகடக்கும் போது பேரழிவை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.
அமெரிக்காவின் மெக்சிகோ வளைகுடாப் பகுதியில் உருவாயுள்ள 'ஹார்விப் புயல்' வலுவடைந்துள்ளது. இந்தப் புயல் இன்று அல்லது நாளை கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புயலானது மணிக்கு 160-200 கி.மீ வேகத்தில் டெக்சாஸ், கார்ப்பஸ் கிறிஸ்டி நகரங்களில் பேரழிவை உருவாக்கும். மேலும் 97 செ.மீ வரை மழை பெய்யும். இந்தப் புயலால் 12 அடி உயரம் வரை கடல் அலைகள் எழும் எனவும் புயல் எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.
இந்த 'ஹார்விப் புயல்' பேரழிவை உருவாக்கும் என்பதால் பேரிடர் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மெக்சிகோ வளைகுடாப் பகுதிகளில் வாழும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால் பாடசாலைகள், அலுவலகங்கள் அனைத்துக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மின் உற்பத்தி நிலையங்களும் மூடப்பட்டன. கடந்த 2005 ஆம் ஆண்டு 'வில்மா' புயலால் ஃப்ளோரிடா மாகாணம் பலத்த சேதத்துக்கு உள்ளானது.
அதன்பின் 12 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது உருவாகியுள்ள இந்த 'ஹார்விப் புயல்' மக்கள் அனைவருக்கும்பெரும்அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# சாம் சங் முதலாளிக்கு சங்கு!!



தென்கொரியாவைச் சேர்ந்த உலகின் முன்னணி ஸ்மார்ட் போன் நிறுவனமான சாம்சங் நிறுவனத்தின் தலைவர் லீ குன்-ஹீயின் மகனும், சாம்சங் நிறுவனத்தின் துணைத்தலைவருமான லீஜே-யோங், ஊழல் வழக்கு ஒன்றில் ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றுள்ளார்.
இந்த வழக்கு தென்கொரியாவில் 'சேபோல்ஸ்' என்று அழைக்கப்படும், பணக்காரக் குடும்பங்களின் கட்டுப்பாட்டில் உள்ள, பலம் வாய்ந்த பெரு நிறுவனங்களுக்கு எதிராக மக்களுக்கு அதிகரித்து வரும் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது.
ஜே ஒய் லீ என்றும் அழைக்கப்படும் லீ, 2014-ஆம் ஆண்டு அவரது தந்தையின் உடல் நலக்குறைவுக்குப் பிறகு, சாம்சங் நிறுவனத்தை நிர்வகித்து வருகிறார்.
பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் கடந்த பெப்ரவரி மாதம் அவர் கைது செய்யப்பட்டார்.
அரசியல் ஆதாயங்களைப் பெறும் நோக்குடன், தென் கொரிய முன்னாள் அதிபர் பார்க் குன் ஹெ-வின் நீண்டகால தோழியான சோய் சூன் சில் நடத்தி வந்த தொண்டு நிறுவனங்களுக்கு 36 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு நன்கொடை அளித்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு 5 ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ)



# மூண்டது மோதல் மியான்மர் அதிர்வு!

மியான்மர் நாட்டில் ரோஹிங்யா போராளிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நேற்று கடும் மோதல் மூண்டது. இந்த மோதல்களில் மொத்தம் 71 பேர் பலியாகினர்.
மியான்மர் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து, ஜனநாயக ஆட்சி மலர்ந்திருக்கிறது.
அங்குள்ள ராகினே மாகாணத்தில் பௌத்தர்களுடன், பங்காள தேஷைப் பூர்வீகமாகக் கொண்ட ரோஹிங்யா முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.
கிட்டத்தட்ட 11 லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் அங்கு வாழ்கின்றனர்.
ஆனால் அவர்கள் நீண்டகாலமாகப் பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாவதாகச் சொல்லப்படுகிறது.
அவர்கள் மீது மியான்மர் பாதுகாப்புப் படைகளும், சில பௌத்த மதக் குழுக்களும் கூடத் தாக்குதல் நடத்துவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.
ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக 'தி அராக்கன் ரோஹிங்யா சால்வேசன் ஆர்மி' என்ற பெயரில் ஒரு போராளிக் குழு இயங்கி வருகிறது.
இந்த நிலையில் ராகினே மாகாணத்தில் நேற்று அதிகாலை ஒரு மணி முதல் 24 பொலிஸ் நிலைகளைக் குறிவைத்து ரோஹிங்யா போராளிகள் ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்தினர்.
அவர்களை எதிர்த்து பொலிஸாரும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். ஒரு இராணுவத் தளத்தினுள் ஊடுருவவும் ரோஹிங்யா போராளிகள் முயற்சித்தனர்.
இந்த மோதல்களில் மொத்தம் 71 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 12 பேர் பாதுகாப்புப் படையினர். மற்றவர்கள் போராளிகளும், பொதுமக்களும் என்று கூறப்படுகின்றது. (இ)

# உதவத் தயார்!

## ஐ.நா. செயலர் அறிவிப்பு

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் தீவிரவாத அமைப்புகளை வேரறுப்பதற்காக அந்த நாட்டுக்குத் தூதரக ரீதியில் உதவத் தயார் என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரஸ் தெரிவித்துள்ளார்.
தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் விளங்குவதாகவும் இனியும் அதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2 தினங்களுக்கு முன்பு எச்சரித்தார்.
இதுதொடர்பான செய்தியாளர்களின் கேள்விகளுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரஸின் செய்தித் தொடர்பாளர் ஸ்டெபானி துஜாரிக் கூறியதாவது:
பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளை ஒடுக்க அந்த நாட்டுக்குத் தேவையான உதவியைத் தூதரக ரீதியாகச் செய்ய ஐ.நா. பொதுச் செயலாளர் தயாராக உள்ளார்.
பாகிஸ்தான் தீவிரவாதத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு அங்கு அமைதியை ஏற்படுத்த ஐ.நா. விரும்புகிறது. இந்த முயற்சிக்கு சர்வதேச நாடுகள் உதவி செய்யும் என்று பொதுச் செயலாளர் குட்ரஸ் நம்புகிறார். இத்தகைய உதவியை அந்த நாட்டில் உள்ள ஐ.நா. தூதரகம் மூலம் செய்யத் தயாராக உள்ளோம்- என்றார். (இ)

# ஆதரவு




டெல்லியில் தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவாக, அதன் நேரலையை தமது ஃபேஸ்புக் பக்கத்தில் மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படை காவலர் ஒருவர் ஒளிபரப்பினார்.
மேலும், ஜந்தர் மந்தர் பகுதியில் படைவீரர்களின் ஓய்வூதியம், வீரர்களின் பணிப்பாதுகாப்பு உள்ளிட்டவை தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்ட மேடையிலும் தமிழக விவசாயிகளை அந்தக் காவலர் ஏற்றினார்.
படையின் முழுமையான அலுவல் சீருடையில் இருந்த முகம்மது ஜலீல் என்ற அந்தக் காவலர் கூறுகையில் "தெலுங்கானா மாநிலத்தில் உள்ள மத்திய தொழிலகக் காவல் படை அலுவலகத்தில் பணியாற்றி வருகிறேன். பணிப்பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி எனது நண்பர்களான முன்னாள் படை வீரர்கள் சங்கத்தினர் ஜந்தர் மந்தரில் போராடி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக டெல்லி வந்தேன். விவசாயிகள் நியாயமான கோரிக்கைக்காகப் போராடுகின்றனர். அவர்களின் கோரிக்கையை நாட்டின் துணை இராணுவப் படை வீரர் என்ற முறையில் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவே அவர்களின் போராட்டத்தை நேரலையாக ஒளிபரப்பினேன்" என்றார். (இ)

# சாமியார் குற்றவாளி: வெடித்தது கலவரம்!



வன்புணர்வு வழக்கில் மதத் தலைவர் ஒருவர் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறப்பட்டதால் இந்தியாவின் அரியானா, பஞ்சாப் மாநிலங்களில் பயங்கரக் கலவரம் ஏற்பட்டுள்ளது.
'தேரா சச்சா சவுதா' என்ற மத அமைப்பின் தலைவராக இருப்பவர் குர்மீத் ராம் ரகீம் சிங்.
இவருக்கு பஞ்சாப், அரியானா மாநிலங்களில் ஏராளமான ஆதரவாளர்கள் உள்ளனர்.
ராஜஸ்தான், குஜராத், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள்.
தனது பக்தைகள் இருவரை வன்புணர்வு செய்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த சண்டிகாரின் புறநகர்ப் பகுதியான பஞ்சகுலாவில் உள்ள சி.பி.ஐ. தனி நீதிமன்றம், குர்மீத் ராம் ரகீம் சிங் குற்றவாளி என்று நேற்று மதியம் தீர்ப்பு வழங்கியது. அவருக்கான தண்டனை விவரத்தை நாளை மறுநாள் (திங்கட்கிழமை) நீதிபதி அறிவிக்க இருக்கிறார்.
இந்தக் கற்பழிப்பு வழக்கின் மீதான தீர்ப்பை, வட மாநிலங்களில் உள்ள தேரா சச்சா சவுதா அமைப்பினர் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர். தீர்ப்பை அறிந்துகொள்வதற்காக பல்வேறு இடங்களில் இருந்தும் நேற்று முன்தினம் முதலே அவர்கள் பஞ்சகுலாவில் குவியத் தொடங்கினார்கள்.
தீர்ப்பு, குர்மீத் ராம் ரகீம் சிங்குக்கு எதிராக அமைந்தால் பெரும் அளவில் கலவரம் ஏற்படலாம் என்று கருதி, சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் நோக்கில் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை அரியானா மாநில அரசு எடுத்திருந்தது. பாதுகாப்புப் பணிக்காக மாநில பொலிஸாருடன் துணை இராணுவப் படையினரும் வரவழைக்கப்பட்டு இருந்தனர்.
ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்த போதிலும், நேற்றுத் தீர்ப்பு வெளியானதும் அரியானா, பஞ்சாப் மாநிலங்களில் கல்வீச்சு, தீவைப்பு போன்ற வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு பெருமளவில் கலவரம் வெடித்தது. 29 பேர் வரையில் இந்தக் கலவரங்களில் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்பதால், உயிரிழப்பும் சேதங்களும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது. (இ)







# பெரும் மோதல்

நாளை காலை உலகத்தையே தன்வசம் இழுத்துக்கொள் எப்போதும் ஜாம்பவான்கள் மோதும் குத்துச்சண்டை அரங்கேறவுள்ளது.

அமெரிக்காவின் புளோயிட் மேவெதர், கனோர் மெக்கிரிகோர்(அயர்லாந்து) ஆகியோரிடையேயே இந்த 'மெகா' குத்துச்சண்டைப் போட்டி அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் நடக்கவுள்ளது. இது 12 சுற்றுகளைக் கொண்ட போட்டியாக அமையும்.

தொழில்முறைகுத்துச்சண்டையில்தோல்வியே சந்திக்காதவர் 40 வயதான மேவெதர். 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஓய்வு பெறுவதாக அறிவித்த அவர், மீண்டும் குத்துச்சண்டைக் களத்துக்குத் திரும்பியிருக்கிறார்.

தான் பங்கேற்ற 49 போட்டிகளிலும் வாகை சூடியிருக்கும் மேவெதர், அதில் 26 பேரை 'நொக்-அவுட்' செய்திருப்பதும் அடங்கும்.

இவரை எதிர்த்துக் களமிறங்கவுள்ள யு.எப்.சி. லைட்வெயிட் சம்பியனான 29 வயதான மெக்கிரிகோர், இதுவரை 24 போட்டிகளில் விளையாடி, 21இல் வெற்றி பெற்றுள்ளார்.

சரமாரியாக குத்துகள் விடுவதில் வல்லவர்களான இருவரும் களத்தில் பயங்கரமாக மோதிக்கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி நாளை காலை (ஞாயிற்றுக்கிழமை) 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

# கோலமாவு கோகிலா



தமிழ் சினிமாவின் கனவுக் கன்னியாக இருக்கும் நயன்தாரா, அறிமுக இயக்குநர் நெல்சன் திலீப் குமார் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

நகைச்சுவைப் படமாக உருவாக இருக்கும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் யோகி பாபு நடிக்கிறார். இந்தப் படத்தை லைகா நிறுவனம் தயாரிக்க, அனிருத் இசையமைக்கிறார்.

இந்தப் படம் குறித்த அறிவிப்பு அடங்கிய வீடியோவை சிவகார்த்திகேயன் நேற்று வெளியிட்டார். இந்தப் படத்துக்கு 'கோகோ' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. அதாவது "கோலமாவு கோகிலா" என்பதை சுருக்கி 'கோகோ' என்று வைத்துள்ளனர். (ஓ)

# இணையத்தில் 2.0



ரஜினிகாந்த் நடித்துள்ள 2.0 படம் தயாரான படப்பிடிப்பு வீடியோக் காட்சிகளை இணையத்தளத்தில் இயக்குநர் ஷங்கர் நேற்று வெளியிட்டார். உலகம் முழுவதும் ரசிகர்கள் இதனை ஆர்வத்தோடு பார்த்துவருகின்றார்கள்.

இந்திய மதிப்பில் சுமார் 450 கோடி ரூபா செலவில் இந்தப் படம் உருவாகியுள்ளது. இதன் படப்பிடிப்புகள் நடந்து முடிந்துவிட்டன. சென்னை பூந்தமல்லி அருகே உள்ள பொழுதுபோக்குப் பூங்காவில் ஒரு நகரையே அரங்காக உருவாக்கி பெரும்பகுதிக் காட்சிகளைப் படமாக்கியுள்ளனர். 'பாகுபலி' படத்துக்கு இணையாக கிராபிக்ஸ் பணிகள் தற்போது நடந்துவருகின்றன. ஜனவரி மாதம் 2.0 படம் திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 2.0 படம் தயாரான வீடியோக் காட்சிகளை இணையத்தளத்தில் இயக்குநர் ஷங்கர் வெளியிட்டுள்ளார்.(ஓ)

# முடிந்தது ஓட்டம்

இங்கிலாந்தின் மரதன் ஓட்ட வீரரான மோ பரா தனது கடைசி 5000 மீற்றர் ஓட்டத்தில் வெற்றி பெற்று அசத்தினார்.

இங்கிலாந்தின் 5000 மீற்றர் ஓட்டப் போட்டி வீரரான மோ பரா (வயது-34), ஒலிம்பிக்கில் நான்கு தங்கங்கள் வென்று அசத்தியவர்.

சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப் தொடர்தான் உலகளவில் ஓடும் கடைசி ஓட்டம் என்று அறிவித்தார். அதில் தங்கப் பக்கம் வென்று முத்திரை பதித்தார்.




இந்நிலையில் சுரிச் நகரில் டைமண்ட் லீக் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் ஓடுவதுடன் தனது ஓட்டம் நின்று விடும் என்று அறிவித்தார். அதன்படி நேற்றுத் தனது கடைசி ஓட்டத்தில்கலந்துகொண்டார். அவருக்குப்போட்டியாக கருதப்படும் முக்தார் எட்ரிஸூம் இதில் கலந்துகொண்டார். முக்தார் எட்ரிஸ், செலிமோ ஆகியோர் மோ பாராவிற்கு கடும் சவாலாக விளங்கினார்கள். எனினும் கடைசிச் சுற்றில் மோ பரா சிறப்பாக ஓடி 13 நிமிடங்கள்06.06 விநாடிகளில்கடந்து முதல் இடத்தைப் பிடித்தார்.

செமிலா 13 நிமிடங்கள் 06.09 விநாடிகளில் கடந்து 2ஆவது இடத்தையும், எட்ரிஸ் 3ஆவது இடத்தையும்பிடித்தனர். இந்த வெற்றியுடன் மோ பாரா விடைபெற்றார்.(ஐ)

# ரூட் சாதனை, ஸ்டோக்ஸ் 100
# இங்கிலாந்து திண்டாட்டம்




இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஹெட்டிங்லேயில் நேற்றுத் தொடங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க வீரர் அலஸ்டயர் குக் (11) உட்பட 4 முன்னணி வீரர்கள் 71 ஓட்டங்களை எட்டுவதற்குள் நடையைக் கட்டினர்.

இதன் பின்னர் ஜோ ரூட்டும், சகலதுறை வீரரான பென் ஸ்டோக்சும் அணியை வீழ்ச்சிப் பாதையிலிருந்து ஓரளவுக்குத் திசை திருப்பிச் சென்றனர்.

ஜோ ரூட் 59 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். அவர் தொடர்ச்சியாக 12 டெஸ்ட்களில் ஏதாவது ஒரு இன்னிங்ஸில் 50 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்திருக்கிறார். இதன் மூலம் தொடர்ந்து 12 டெஸ்ட்களில் அரைச்சதம் அடித்த டிவில்லியர்ஸின் (தென்னாபிரிக்கா) உலக சாதனையைச் சமன் செய்தார்.

மறுமுனையில் 6ஆவது சதத்தை நிறைவு செய்த பென்ஸ்டோக்ஸ், 100 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸூக்காக 258 ஓட்டங்களைச்சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெமர் ரோச், கேப்ரியல் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆடத்தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டைப் பறிகொடுத்து 19 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. (ஐ)

## ஆசிரியர்களுக்கு தடை இல்லை

அரச சேவையில் உள்ள களப்பணி யாற்றும் அதிகாரிகள் மாத்திரமே, உள்ளூ ராட்சித் தேர்தலில் போட்டியிடக் கட்டுப் பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆசிரி யர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு பொருந்தாது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.
உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்ட வரைவு நேற்று நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.
சமுர்த்தி அதிகாரிகள், அபிவிருத்தி அதிகா ரிகள், கிராம அதிகாரிகள் போன்ற களப் பணி ஆற்றும் பொதுச்சேவை அதிகாரிகள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட முடியாது. உள்ளூராட்சித் தேர்தலில் போட் டியிடும், அரச பணியாளர்கள், ஒரு ஆண் டுக்கு முன்னரே ஓய்வுபெற்றிருக்க வேண் டும் என்று உள்ளூராட்சித் தேர்தல் திருத் தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது என்றும், ஆசிரியர்கள் போட்டியிட முடியும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. (உ)

## தொகுதி முறையே ஜனநாயகப் பண்பு



மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தல் களுக்கும் உள்ளூராட்சிமன்ற திருத்தச் சட்டமூலத்தின் கீழான உரிமையை அறிமுகம் செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக ஊடகத்துறை பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் மாநாட்டில் அமைச்சர் இந்த விட யத்தைக் குறிப்பிட்டார்.
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறு வனங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா கலந்து கொண்ட இந்தச் செய்தியாளர் மாநாட்டில் தொகுதி அடிப்படையில் மக்கள் பிரதிநிதி கள் உருவாகுவது ஜனநாயகப் பண்பாகும் என்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன மேலும் தெரிவித்தார். (உ)

## சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டது



2012ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 22ஆம் இலக்க சட்டத்தினால் எல்லை நிர்ணயத்தின் போது சிறுபான் மையின மக்களுக்கு அநீதி இழைக்கப்பட டது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி நிறுவனங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார். எல்லை நிர்ணய பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருந் தால் தேர்தல் நடத்த மேலும் காலம் எடுத் திருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.
புதிய சட்டத்தினால் பொறுப்புக் கூறக்கூடி யவர்கள் அரசியல் பயணத்தில் இணைந்து கொள்வார்கள். நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றத்திருத் தச் சட்டமூலத்தினால் எதிர்கால அரசியல் பயணத்தில் கற்றறிந்தவர்கள் இணைந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.
எந்தவொரு அரசியல் கட்சியும் இந்தச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ)



# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நிர்மாணத்துறையே பிரதானம்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங் களின் போது, நிர்மாணத்துறை சேவை களின் பங்களிப்பு மிக முக்கியமானவை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கன்ஸ்ட்ரக்ட் 2017 தேசிய கட்டட நிர்மாணத்துறைக் கண்காட்சியை நேற்று ஆரம்பித்து வைத்து உரை யாற்றிய அவர், "பாரிய அளவிலான கைத் தொழில் சாலைகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். பலமான சக்திமிக்க பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்குக் கட்டட நிர்மாணத் துறையின் பங்களிப்புப் பெற்றுக் கொள்ளப் படும். அந்த வகையில், அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் சுற்றுலா மற்றும் நிர் மாணத்துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்" - என்றார். (உ)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல




மியான்மரிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள புத்தபெரு மானின் திருவுருவச் சிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதன்முறையாக வழிபட்டார். இந்த நிகழ்வு இன்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.
மியான்மரில் வசிக்கும் ஜயந்த ராஜகருணா என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள இந்த புத்தபெருமானின் திருவுருவச் சிலை அனுராதபுரம் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகா ரைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது. ஜனாதிபதி புத்தபெருமானின் திருவுருவச் சிலை வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து அனுராதபுரம் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகா ரையை நோக்கியப் பயணம் ஆரம்பமானது. (உ)

## உயர்கல்வி வாய்ப்பு

புதிய கல்வி மறுசீரமைப்புத்திட் டத்துக்கு அமைய கடந்தாண் டில் சாதாரணதரப் பரீட்சை யில் சித்தியடையாத நான்காயி ரத்து 500 மாணவர்களுக்கு உயர்தரத்தில் கல்வியைத் தொடர் வதற்கான வாய்ப்புக் கிட்ட வுள்ளது.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதத் திலிருந்து மாணவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிட்டவிருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.
இனங்காணப்பட்ட 43 பாட சாலைகளில் 26 தொழில்நுட் பம் சார்ந்த பாடநெறிகளை தொடர்வதற்கு மாணவர்க ளுக்கு சந்தர்ப்பம் வழங்கப் படும். அனைத்து மாணவர்க ளுக்கும் தரம் 13 வரை கட் டாயக் கல்வியை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெ டுக்கப்படுவதாக கல்விய மைச்சு அறிவித்துள்ளது. (உ)

## கொடியேற்றம்



வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலய கொடியேற்றம் நேற்று நடைபெற்றது. எதிர்வரும் 2ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 3ஆம் திகதி கும்பாபிஷேக தினமாகிய திருவோண நட்சத்திரத்தில் நவோத்திர சஹஸ்ர சங்காபிஷேகமும் தீர்த்தோற் சவமும் மாலை கொடியிறக்க வைபவமும் நடைபெறும். (உ)

## நாளை நாளும் கோளும்

27.08.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 11 ஆம் நாள்
நவமி மு.இ 8.47 வரை — ரேவதி மு.இ. 09.10 வரை — மரணயோகம்
இராகுகாலம் 12.27 - 01.57 — சுபநேரம் 04.57 - 06.27 — எமகண்டம் 07.57 - 09.27

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜெயம் | பெருமை | தெளிவு | சோர்வு | சாதனை | உயர்வு | முயற்சி | சுகம் | சுகம் | கவனம் | வேதனை | கொள்கை |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1993.08.26**

யாழ்ப்பாணம், கிளாலியில் இலங்கைக் கடற்படையின் இரு படகுகள் கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.

### சட்டமா அதிபர் திணைக்களம் மீது
# பக்கச்சார்பு குற்றச்சாட்டு

சட்டமா அதிபர் திணைக்களம் பக்கச் சார்பாக செயற்பட்டுள்ளதாக அரச மருத்தவ அதிகாரிகளின் சங்கம் குற்றம்சுமத்தியுள்ளது.

சைட்டம் பிரச்சினை தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக் களம் ஏற்கனவே பல தடவைகள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சைட்டம் நெருக்கடி தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பின் பின்னர் செய்தி



யாளர்களிடம் கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே இந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். (உ)

## அலைபேசிக்கு ஆபாசப்படம்
### இளைஞர் கைது

பெண்ஒருவரின்கையடக்கத்தொலைபேசிக்கு ஆபாசப் படங்களை அனுப்பிய இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

முகப்புத்தகம் மூலம் குறித்த குடும்பப் பெண்ணுடன் நட்பாகிய இந்த இளைஞர், அந்தப் பெண்ணின் கைத்தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுள்ளார். அந்தப் பெண்ணின் கணவருக்கும் இந்த இளைஞர் நண்பர். ஆயினும் பின்னர் அந்த இளைஞர் தவறான எண்ணத்துடன் பழக முற்பட்டதால், அவருடனான நட்பை அந்தக் குடும்பப் பெண் துண்டித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த இளைஞர் ஆபாசப் படங்களை அந்தப் பெண்ணின் தொலைபேசிக்கு அனுப்பினார்.

இதனையடுத்து குறித்த பெண்ணின் கணவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து, இளைஞர் கைதானார். (ஆ)

## ஐ.தே.க.வுக்கு ஆதரவில்லை

நாடாளுமன்றில் தான் தனித்துச் செயற்படப்போவதாக முன்னாள் நீதி அமைச்சரும் பௌத்த சாசன அமைச்சருமான விஜேதாச ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். நேற்று இரவு ஜனாதிபதியுடன் இடம்பெற்ற உரையாடல் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்ட அவர், தான் கூட்டு எதிரணியில் தற்போதைக்கு இணையப் போவதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் கொண்டுவரப்படும் திட்டங்களுக்கு தான் முழுமையாக ஆதரவு வழங்கவுள்ளதாக ஜனாதிபதிக்கு அவர் உறுதியளித்துள்ளார். எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டங்களைத் தான் ஆதரிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். (எ-09)


### ஆவாக்களுக்கும் அரசியலுக்கும்
# தொடர்பில்லை

**எல்லாம் சினிமா பைத்தியங்கள்**

தென்னிந்தியச் சினிமாவின் தாக்கத்தினால் உருவாகியதே ஆவாக் குழு எனவும் அக்குழுவுக்கு எந்தவித அரசியல் நோக்கமும் இல்லையெனவும் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ஆவாக் குழு தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர், வெளிநாடுகளிலிருந்து நிதி கிடைக்கும் இளைஞர்கள் சிலர் இந்தியச் சினிமாவினால் தாக்கமடைந்தே இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

தமிழ்மக்கள் தமது உரிமைகளுக்காக



போராடிக்கொண்டிருக்கும்வேளையில், அதற்குச் சமாந்தரமாக இக்குழு வன்முறையில் ஈடுபட்டு வருகின்றது.

வெளிநாட்டிலுள்ள சில அமைப்புக்கள் வடமாகாணத்தில் அமைதியற்ற சூழலையே விரும்புகின்றனர். இவ்வமைப்புக்களால் இக்குழுவுக்கு நிதியுதவி வழங்கப்படுகின்றதா என்பதை பாதுகாப்புத் தரப்பினர் தான் விசாரணை செய்து அறிய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (எ)

## சங்காபிஷேகம்



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கல்வியங்காடு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று சங்காபிஷேகம் இடம்பெற்றது. வருடாந்த ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு ஆயிரத்தெட்டு சங்கினால் விநாயகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் இடம்பெற்றதுடன் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு இலட்சார்ச்சனையும் இடம்பெற்றது. (உ)

## சிறுமிகள் துஸ்பிரயோகம் தந்தைக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு - மஞ்சந்தொடுவாய் பகுதியில் சிறுமிகள் இருவரைத் துஷ்பிரயோகம் செய்த தந்தை ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

6 மற்றும் 8 வயதான தனது பெண் பிள்ளைகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரான 50 வயதான தந்தையே எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நடைபெற்றபோது நீதவான் எம்.கணேசராஜா குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சிறுமிகளின் தாயும் தந்தையும் ஏற்கனவே பிரிந்து வாழ்கின்றனர். தந்தை மறுமணம் செய்துள்ளார். சிறுமிகள் தாயுடன்



வசித்து வருகின்றனர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை தந்தை தங்களை அழைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குவதாக குறித்த சிறுமிகள் தாயிடம் தெரிவித்த நிலையில், அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தார். (உ)

**யாழ்ப்பாணத்தில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெங்கு நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதன் ஊடாகவே டெங்குத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். அந்த முயற்சியில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். குப்பைகளை அகற்றுவது மக்களினதும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும் முக்கிய கடமையாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பிரதேசமும் சுத்தமாக இருக்க வேண்டும். டெங்குத் தொற்றுக்குள்ளான ஒருவரை டெங்கு நுளம்புகள் குத்துமாயின் அந்தப் பிரதேசம் முழுவதும் டெங்கு பரவும் அபாயம் உள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலை யாழ். நகருக்குள் இருக்கின்றது. வைத்தியசாலைச் சுற்றாடலில் பொலித்தீன் கழிவுகள் அதிகளவில் காணப்படுகின்றன. அவை அனைத்தும் உடனடியாக அகற்றப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், வர்த்தகர்களும், பொதுமக்களும் இது தொடர்பில் உரிய அக்கறை எடுக்க வேண்டும்"- என்று அவர் கோரியுள்ளார்.(ஆ)

**விருப்புவாக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாத்தோம். தனி அதிகார ஆணவத்துடன் செயற்படவில்லை.மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையாக புதிய தேர்தல் முறைமை அமையும் எனத் தெரிவித்தார். (எ)

**சரணடையச்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனர். அவர்கள் தற்போது நீதிமன்றக் காவலில் உள்ளனர். இந்நிலையில் நிலைமைகளைச் சுமுகமாக்க துன்னாலைப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொலிஸாருடன் பொதுமக்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தமது பிள்ளைகளுக்கு பொது மன்னிப்பு வழங்க உதவுமாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன்போது உரையாற்றி அவர், "பொதுமன்னிப்பு நீதிமன்ற நடவடிக்கை சார்ந்த விடயம். எங்கள் கடமை குற்றவாளிகளைக் கைது செய்வதே. இன்னமும் பலருடைய பெயர்கள் எம்மிடம் உள்ளன. அவர்களைக் கைது செய்யும் நவடிக்கை தொடரும்" என்றார். (எ-11)

**உ/த. பரீட்சை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தது. இதனையடுத்து 03 ஆம் திகதிக்கு பரீட்சையை மாற்றுவதாக கல்வி அமைச்சர் நேற்று அறிவித்திருந்தார். எனினும் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறையைக் கருத்தில் கொண்டு 04 ஆம் திகதியே பரீட்சை நடைபெறும் என கல்வி அமைச்சு திகதி மாற்றம் செய்துள்ளது. (உ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.